# மூத்த குடிமக்களுக்கு முழுப் பார்வை அளிக்கும் சேவை: 322 பேருக்குப் பயன்



‘தி லென்ஸ் மென்’ நிறுவன கண் நிபுணர் மூத்த மாது ஒருவரை சோதிக்கிறார். **படம்: மத்திய சிங்கப்பூர் சமூக மேம்பாட்டு மன்றம்**

கண் பார்வை பாதிக்கப்பட்ட 322 முதியோருக்கு மத்திய சிங்கப்பூர் சமூக மேம்பாட்டு மன்றத்தின் ஏற்பாட்டில் மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

சுமார் 60 வயதுக்கு மேற்பட்ட இவர்களின் கண் பராமரிப்பும், அவரவர் கண் பார்வைக்கு ஏற்ப மூக்குக் கண்ணாடிகளும் மத்திய சிங்கப்பூர் சமூக மேம்பாட்டு மன்றத்தின், ‘தி லென்ஸ் மென்’ என்னும் கூட்டு நிறுவனத்தால் வழங்கப்பட்டது.

இலவசமாக அளிக்கப்படும் அடிப்படை கண் பராமரிப்பு திட்டத்தினால் ‘கேர் கார்னர்’, ‘அவ்வா’ எனப்படும் ஆசிய பெண்கள் நலச் சங்கம், மற்றும் ரெட்ஹில் மாரல் மூத்தோர் செயல்பாட்டு மையங்கள் ஆகிய அமைப்புகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 322 மூத்த குடிமக்கள் பயன் அடைந்தனர்.

கண் பரிசோதனையையும், ஒளிவிலகல் சோதனையையும் தவிர்த்து ‘தி லென்ஸ் மென்’ நிறுவனம் தூரபார்வைக்கும், வாசிப்பதற்கும் மூக்குக் கண்ணாடிகள் அணிய வேண்டிய முதியோருக்கு $26,000 மதிப்புள்ள 192 ஜோடி மூக்கு கண்ணாடிகளை நன்கொடையாக வழங்கி உள்ளது. கண் பரிசோதனைகளுக்கும் மூக்கு கண்ணாடிகளுக்கும் தகுதி பெற்ற மூத்தோர் தங்களின் தேவைகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

“எங்களின் உதவும் கரங்கள் அணுகுமுறையின் ஒரு பகுதியாக மத்திய சிங்கப்பூர் சமூக மேம்பாட்டு மன்றம் நமது மூத்தோர் அர்த்தமுள்ள வாழ்க்கை முறையை வாழ்வதற்கு தொடர்ந்து கூட்டு பங்குதாரர்களை தேடிக்கொண்டு இருக்கும்,” என்று மத்திய சிங்கப்பூர் சமூக மேம்பாட்டு மன்றத்தின் திரு வான் குவாங் வேங் கூறினார்.

## Helping senior citizens with their eye care; 322 seniors benefit

With the help of Central Singapore Community Development Council (CDC), 322 senior citizens who were affected by poor eyesight were able to get free spectacles.

The senior citizens aged 60 & above were given free eye checks and also subsequently were provided with spectacles. This sponsorship was part of an ongoing collaboration between the CDC and The Lens Men.

322 senior citizens from Care Corner, AWWA and Redhill Moral Seniors Activity Centres (SACs) benefited from the free primary eye care.

Besides providing an eye-screening and refraction test, The Lens Men also donated and dispensed 192 pairs of spectacles for both distance and reading prescriptions to seniors who required vision correction for a total sponsorship of $26,000.

The seniors who qualified for the eye checks and glasses prescription were chosen on a needs basis, and the entire project – including the administration of the eye checks and prescription and distribution of glasses – was completed recently.

“As part of our many Helping Hands approach, Central Singapore CDC will continue to look out for more corporate partners to enable our seniors to lead more meaningful lives,” says Mr Wan Kwong Weng, chairman of Central Singapore CDC’s Community Impact Programmes committee who helped link up the CDC with The Lens Men.